# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ம் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளிவருவது

Registered as a News Paper in Ceylon
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - சுங] யாழ்ப்பாணம்:- கர வருஷ பங்குனி மீ ரு உ செவ்வாய்க்கிழமை (18 March 1952) [இல - கூங]


அரசியல் அலை

# பலவேறு வகையிற் பாடப் புத்தகங்கள்

## இயற்றும் பொறுப்பு எங்கே இருத்தல் வேண்டும்?

### மொழி விருத்திச் சங்கங்கள் முன்வரமாட்டாவா?

**மொழி அபிமானிகள் அரசியல் அளவிலேயே நின்று விடுகிறார்கள். மொழி விருத்திக்காக ஆக்க வேலையிற் சிந்தனை செலுத்துகிறார்களில்லை.**

புதிய கல்வித்திட்டம் என்ற முறையில் ஒவ்வொரு ஆண்டுக்கும் மாற்றம் நடைபெற்றுக் கொண்டே வருகிறது. பாடசாலைப் புத்தகங்கள் ஒரே வகுப்புக்குப் பல்வேறு அமைப்பில் இருக்கின்றன. அவ்வவ் வகுப்பிற் பிள்ளைகளின் கிரகிக்கும் ஆற்றலுக் கேற்பப் பாடங்கள் அமைக்கப்பெறுகின்றனவா என்றால் இல்லையென்றே சொல்ல வேண்டும்.

அக்காலத்தில் நாவலர் பாடம் அல்லது சைவபரிபாலனசபையார் பாடம் என்ற முறையிற் சைவர்களுக்கும், கிறிஸ்தவ இலக்கிய சங்கப் பாடங்கள் என்ற முறையிற் கிறிஸ்தவர்களுக்கும் ஒரே தன்மையனவான புத்தகங்கள் இருந்தன.

இக்காலத்திலோ பாடப்புத்தகங்கள் ஆக்குவோர்கள் தானேன்றிகளாகக் காணப்படுகிறார்கள். மொழி விருத்தியா? மொழி வீழ்ச்சியா? என்ற முறையில் வந்து விட்டது கிலை.

தமிழ்மொழி அளவில் ஆசிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் வேறு தமிழ்ச் சங்கங்களுடன் கலந்தாலோசித்து அறிவால் ஆற்றலால் அநுபவ முதிர்ச்சியால் அருகராயுள்ள தமிழ்மொழி இலக்கண இலக்கிய வல்லுநர்களைக் கொண்ட ஒரு பாடப்புத்தகக் குழுவினரை அமைத்து, அதிலும் சைவர்களுக்கு ஒரு குழுவும், கிறிஸ்தவர்களுக்கு ஒரு குழுவும் இஸ்லாமியருக்கு ஒரு குழுவுமாக, சைவபரிபாலன சபை விவேகானந்தசபை முதலிய சைவ சங்கங்களுடனும், கிறிஸ்தவசங்கங்களுடனும் ஆலோசித்து ஒரே அமைப்பான பலதரப் புத்தகங்களைச் செய்தல் அவசியம்.

இவ்வாறு செய்தாலன்றி தமிழ் சிங்களம் அரச மொழிகளாய்வருவது அண்மையில் நடவாதகாரியமாய் முடியும்.

# சைவத்தை வளர்த்த வீரத்தாய்மார்

## அரன் தொண்டாற்றிய நற்றவ மகளிர்

(சித்தாந்தத்தில் திருமதி இராஜேஸ்வரி அம்மையார் எழுதியது)

சிறப்பும் பெருமையும் வாய்ந்த சைவசமயத்திற்கும பல காலத்தில் பல இன்னல்கள் ஏற்பட்டன என்றும், அதற்குக் காரணம் அரசியல் ஆதரவு கிடைக்காத காலத்தில்தான் மதத்தின் பேரால் பூசல்கள் விளைந்தன வென்றும் சரித்திரம் வல்லார் கூறுவர். இப்படிச் சைவசமயத்திற்கு இன்னல்கள் சேர்ந்த காலத்தெல்லாம், பல வீரத் தாய்மார்கள் நம் தமிழ் நாட்டிலே புகழொடு தோன்றிப், புகழொடு வாழ்ந்து, புகழை நிறுத்திச் சைவத்தை வளர்த்தனர் என்பது மறக்கமுடியாத விஷயமாகும். மற்றும் பலர் கணவன் வழிபாடு, அடியார் வழிபாடு, கடவுள் வழிபாடு முதலியவற்றில் ஈடுபட்டுக் கற்புத்திண்மையும், அகத் தூய்மையும், கனிந்த பத்தியும் உடையராய் மிக்க மேம்பாடுற்றுத் திகழ்ந்தனர். பலர் பல துறைகளில் தொண்டாற்றினர். அவர்களுள் சிலரியற்றிய பணியின் பெருமை தமதில்லத்தின் அளவோடேயே நின்றது. வேறு சிலர் தம் கொழுநருக்கு உதவியாய் அடியார்களுக்கு அன்னமளித்தல் முதலியவற்றைச் செய்து தம் கணவர் கொண்ட குறிக்கோளுக்கு யாதொரு பங்கமும் நேர்படாமல் பணியாற்றினர். இவற்றிற்குச் சான்றாகப் பல சரித்திரங்கள் உள்ளன. குங்கிலியக்கலய நாயனார், இளையான்குடிமாற நாயனார், அப்பூதி அடிகள் இவர்களுடைய மனைவியர்களெல்லாம், தம் கொழுநர் கொண்ட கொள்கைக்குச் சிறிதும் மாறுபடாமல் பணி செய்ததனால்தான் அவ்வடியார்களுடைய பெருமை மேன்மேலும் விளங்குவதாயிற்று.

அப்பூதி அடிகள் மனைவியார் பெறலரும் புதல்வன் தன்னைப் பாயினுள் மூடி, அடியார்க்கு அன்னம் படைத்தார்கள் என்றால் அவர்களுக்கு அடியாரிடத்திருந்த பக்தியும கடவுளிடத்திருந்த நம்பிக்கையும், தம் கணவரது கருத்துக்கு இடையூறு நேரக்கூடாதென்ற சிறந்த எண்ணமுமல்லவா அத்தகைய சிறந்த செயலைச் செய்தற்குக் காரணமாயின. இப்படி அடியார்களுக்குப் பெருமை வந்ததெல்லாம அவரது இல்லக்கிழத்தியினால் என்று சொன்னால் மிகையாகாது.

இன்று ஓரளவு சைவம் உலகில் பரவியிருக்கிறது என்றால், அன்று ஒரு வீரத்தாயாம் மங்கையர்க்கரசியாரும், தியாகமே உருவெடுத்த திலகவதியாரும் தோன்றி, சைவத்தை அரசியலோடு பிணைத்து நிலைநிறுத்தி வைத்ததனால்தான். இது அறியாத ஓர் நிகழ்ச்சியாகும்.

இதனால்தான் நம் சேக்கிழார் பெருமான் பெண்களது நுண்ணிய தன்மையை நன்குணர்ந்து இவ்வாழ்க்கைக்கு இவர்கள் இன்றியமையாதவர்கள் என்பதையும் தெரிந்து, பெரிய புராணத்தின்கண்ணே இம்மகளிரைப் பலவகையிற் பாராட்டுகின்றனர். இன்று உலகிலே சமய உணர்ச்சி ஒருவகையில் மக்களிடையே நிலவி வருகிறது என்றால் அது பெண்களால்தான் என்று நிச்சயமாகச் சொல்லலாம்.

உறுதி மொழி

ஆனால் உலகம் மிக வேகமாகப் போகின்ற இக் காலத்திலே பல குழுவினர்கள், பல பேய்க் காற்றுகள் வீசுகின்ற இவ் வேளையிலே எங்கே பெண்களது மனமும் மாறிவிடுகின்றதோ என்று அஞ்சித்தான், நம் சமாசத்தார் சென்ற சில ஆண்டுகளாகப் பெண்களுக்கென்று ஒரு பகுதியை ஒதுக்கி வைத்து, ஒருகால் சமயத்தைப்பற்றி மறந்திருந்தாலும் மீண்டும் ஒருமுறைக் கூட்டி ஞாபகப்படுத்தலாம் என்று எண்ணினர்போலும். சைவத் தாய்மார்களே! உங்கள் சார்பாக அவர்களுக்கு உறுதி கூறுகிறேன். மங்கையர்க்கரசியாரும், திலகவதித் தாயாரும், காரைக்காலம்மையாரும் தோன்றிய நாட்டிலே பிறந்த எங்கள் ஒவ்வொருவர் இரத்தத்திலும் சைவம் ஓடுகின்றது. சமய உணர்ச்சியோடு வாழ்வோம். சமயத்தை வளர்க்கப் பாடுபடுவோம். கடவுள் எண்ணத்தினின்றும் சிறிதும் பிறழாமல் வாழ்க்கையை நடத்த இறைவன் அருள்புரிவானாக.

மங்கையர்க்கரசியார்:- நாம் சமயத்தை வளர்க்கவும் சமய எண்ணத்தோடு வாழவும் மங்கையர்க்கரசியார் சரித்திரமும் திலகவதியார் சரிதமும் துணை புரியும். சைவம் வளர்த்த சோழ அரசனது மகளாகத் தோன்றிப் பாண்டியனால் மணக்கப்பட்ட அரசியார் தினந்தோறும் ஆலயத்திற்குச் சென்றனர்; இறைவனை வழிபட்டனர்; சமண சமயம் சார்ந்திருந்த தன் கணவனை, சம்பந்தரை அழைத்து, மீண்டும் சைவராக்கினர்; அரசனை சைவராக்கியதன் மூலம் பாண்டிய நாட்டில் சைவத்தை வளர்த்துச் சம்பந்த சுவாமிகளால் தேவாரத்தில் பாடும் பெருமையும் பெற்றார்கள்; அதோடல்லாது சேக்கிழார் சுவாமிகளால் தெய்வமாகவும் போற்றப்பட்டார்கள் என்றால் அவர்கள் பெருமையை என்சொல்வது!

திலகவதியார்:- திலகவதியாரிடத்துத் திகழ்ந்தது தியாகம். இவர்கள் தன் சொந்தச் சுகத்தையும் கருதாது, அனைத்துயிரும் உய்யத் தன் தம்பியாருக்காக வாழ்ந்தார்கள்; மனைத்தவம் புரிந்தனர்; பரசமயம் புகுந்திருந்த தன் தம்பியாராகிய மருள்நீக்கியார்க்கு மீண்டும் திருநீற்றை ஐந்தெழுத்தை ஓதித்தந்து, அவரைச் சைவராக்கிய ஓர் அரிய அற்புதத்தைச் செய்து காட்டினர். அப்பர் தேவாரம் நமக்குக் கிடைக்கப் பெற்றது இவர்களாலல்லவா? இவர்களால்தான் அன்று பல்லவ நாட்டில் சைவம் விளங்கியது எனலாம்.

புனிதவதியார்:- இவர்கள் வாழ்க்கையின்மூலம், இவர்களுக்கு ஆண்டவனிடத்து இருந்த ஆழ்ந்த நம்பிக்கையும், இடையறாத பக்தியும் நன்கு விளங்குகின்றன. இறைவனது பரிபூரண அருளைப்பெறப் பக்குவப்பட்டிருந்தனர்; ஒரு கன்றுகுட்டி (?) ... ஒரு கண்பன் மற்றொரு கண்பனை அணுகித் தனக்கு வேண்டியதைப் பெறுவது போல் இறைவனை வேண்டிக் கனியைப் பெற்றனர். மற்றும் தக

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

ஓ

# விரும்பும் அடியார் உள்ளத்துள்ளான் ...

திருச்சிற்றம்பலம்

வெள்ளத்துள் நாவற்று யாங்குன் னருள்பெற்றுத் துன்பத் தின்றும்
விள்ளக்கி லேனை விடுதிகண்டாய் விரும் பும்மடியார்
உள்ளத்துள் ளாய்மன்னு முத்தா சோசமல் கைக்கரசே
கள்ளத்து ளேற்கரு ளாய்களி யாத களியெனக்கே.

திருச்சிற்றம்பலம்

# பாவலரின் சொற் சித்திரம்

## கங்கையை நங்கையல்ல என்ற கற்பனை

( திரு. பொ. கருணாகரர் எழுதியது )

இறைவனுடைய வாமபாகத்திலே மிக்க மகிழ்ச்சியோடு எழுந்தருளி யிருந்த உமையம்மையார் இறைவனைப் பார்த்து எம்பெருமானே, தங்கள் திருமுடியில் உறைகின்ற இவ்விள நங்கை யாவள் என்று கேட்டார். அதற்கு இறைவன், அவ்வுருவம் மங்கையன்று; வெள்ளிய திரைகளை வீசுகின்ற தண்ணீர் என்று கூறினார். அதைக்கேட்ட இறைவியானவள், தூய்மையான ஒளியுடைய முகமும், கருமையான விழிகளும, காதுகளும், வாயும் ஆகிய இவ்வுறுப்புக்கள் தண்ணீருக்குமுண்டோ என்று வினவினர். அதற்கு உத்தரமாக இறைவன் கூறுகின்றார்: முகம்போல உனக்குத் தோற்றுவது தாமரை மலர், கண்களைப் போலத் தோற்றுவது கருக்குவளை மலர், காதுகளைப் போலத் தோற்றுவது வள்ளைக்கொடி, வாயைப்போலத்தோற்றுவது செவ்வல்லி மலர். இவையுனக்கு மாறுபாடாகக் காட்சியளித்தன. இந்த மயக்கம் உனது எண்ணத்தின் மயக்கமேயாகும் என்றார்.

இறைவன் கூற்றினைப் பொய் என்று எண்ணிய உமாதேவியார், "அதெல்லாம் சரி இருக்கட்டும், கொங்கைகளும், கூந்தலும் தண்ணீரில் இருக்குமோ" என்று பின்னும் கேட்க, "அவையும் கொங்கையும் கூந்தலுமல்ல நீர்க் குமிழும் பாசியுமே அப்படித் தோன்றுகின்றன. யான்கூறியவற்றை இல்லை என்று எங்கே மறுத்துரை பார்ப்போம் நங்காய்" என்று இறைவியை விளித்துக் கூறினார்.

இச்சமயத்தில், இறைவன் தலையிலிருந்த கங்கையானவள், நங்காய் என்று இறைவன் உமையம்மையை விளித்ததை, தன்னை விளித்ததாகத் தவறாக நினைத்து ஏன் என்றாள். உடனே இறைவன் இதுவரை மறைத்துக் கூறியவையெல்லாம் வெளிப்பட்டமையைக் கண்டு நாணி என் பிழையைப் பொறுத்திடுக என்று கூறி இறைவியை வணங்கினார். அதற்குத் திருவுள்ளம் மகிழ்ந்த உமையம்மை, உங்களைக் காக்க என்று சிவப்பிரகாச சுவாமிகள் ஒரு சிவாக வீட்டில் மணமக்களை ஆசீர்வதித்தார்.

தொடர்ச்சி 4-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்துசாதனம்

யாழ். கரஞு பங்குனி மீ ௫ உ செவ்வாய்க்கிழமை

## பணி செய்யப் பாராளுமன்றம் செலல் வேண்டுமா?

கலாசாரம் அடையவேண்டுமேயானற் பல்கலைக் கழகப் பட்டம்பெறுதல் அவசியம் என்று எண்ணுவது போலவே தேசப் பணி சமூகத் தொண்டு முதலியன புரிதலுக்குப் பாராளுமன்றத்தில் அல்லது நகர சபை போன்ற சபைகளில் அங்கத்தவர்களாக இருத்தல் வேண்டும் என்று நினைக்கும் வழக்கம் இப்போது அதிகரித்துக்கொண்டே வருகிறது.

பிறர்க்கென வாழ்ந்த பெரியாருட் பெரியாராகிய காந்தியடிகள் செய்த தொண்டுபோல எக்காலத்திலும் எத் தேசத்திலும் இல்லவே இல்லை. அம் மகான் பாராளு மன்றம் புகவுமில்லை. ஆங்குசெல்ல எண்ணவுமில்லை.

இலங்கையிலே அரசியல் விவாதத்திற் கலந்துவிட்டால் அதுவே தேசத்தொண்டென்ற பிழையான எண்ணம் கொண்டவர்கள் பலர் இருக்கின்றார்கள்! ஆனல் இத் தேசத்தின் முன்னேற்றத்திற்காக, சமூக வளர்ச்சிக்காகப் பெரும்பணியாற்றியவர்கள் எவருமறியாது இலைமறை காய்கள் போல ஆங்காங்கே இருந்திருக்கிறார்கள்; இருக்கிறார்கள்.

'மேலுலகம் இல் லெனினும் ஈதலே நன்று' என்ற வள்ளுவ ஞான வாக்கியத்திற்கமைய கொடையாளி யென்ற பொதுசனப் பட்டத்தைப் பெற்ற வள்ளல்கள் சிவாலயங்கள் அமைக்கவும் கல்விக் கழகங்கள் நிறுவவும் வைத்தியசாலை வசதிகளுண்டுபண்ணவும் வேறு வகைகளிலும் தொண்டுபுரிந்து வந்தனர். ஸ்ரீ இராமநாதவள்ளல்போன்ற ஈகையாளர்களிற் பின் இக்காலத்தும் அத்தகையார் இருக்கின்றார்கள் என்பது எங்கள் சமூகத்திற்கு ஓர் நற்குறியேயாகும்.

வைத்திய நிபுணர் திரு. S. சுப்பிரமணியம் அவர்கள் சைவவித்தியாவிருத்திச் சங்கத்துக்கும் தனிப்பட்ட முறையிற் பல கலா நிலையங்களுக்கும் வைத்திய சாலைகளுக்கும் பெருந்தொகைப் பணம் ஈந்து அரும்பணி ஆற்றி வருவது எவருமறிவர். இது போன்று, சைவபரிபாலன சபைத் தலைவர் திரு. இ. சிவகுருநாதரவர்கள் வித்யா விருத்திக்காகப் பிரதானமாகப் பெண்கள் கல்வியின்பொருட்டு உதவிய வள்ளன்மை குறிப்பிடத்தக்கது. இன்னமும் ஊர்கடோறும் எவருமறியாது பொதுசன சேவைக்குப் பணம் உதவும் பெரியார்கள் இருக்கின்றார்கள். அத்தகைய பெணமணிகளும் உளர்.

எனவே சமூகமுன்னேற்றத்திற்குப் பொருளுபகாரிகளாகும் தொண்டிற் பலப்பலர் ஈடுபடுவரேல் அரசாங்க உதவியின்றியே செய்யப்படவேண்டிய பல சமூகத்திருத்தங்களை ஆக்கி விடலாம்.

உடாஅதும் உண்ணதும்
தம்முடம்பு செற்றும்
கெடாஅத் நல்லறமும்
செய்யார்—கொடாஅது
வைததீட்டினர் இழப்பர்
வான் தோய் மலைநாட,
உய்த் தீட்டும் தேனீக் கரி,

என்ருங்கு நம்பன்பணிக்கு நல்காத் திரவியங்கள் எற்றுக்கு? அரசியற் கூட்டங்கள் அமைப்பதிலும் களியாட்டங்கள் கூட்டுவதிலும் ஆலய விழாக்களிலும் அனாவசியமாகப் பெரும் பொருள் செலவு செய்பவர்கள் செலவாளிகள் என்ற முறையாற் கொடையாளிகளாகார். அவர்கள் பழிகாரர் ஆவர்.

'இரவாமல் ஈந்த
இறைவர் போல் நீயுங்
கரவாமல் ஈகை கடன்'

என்றதுபோலத் தேசத்தொண்டு செய்ய முன்வருபவர்கள் மேடைமீது பேசுவதும் வல்லடி வழக்குச் சொற்போருக்கறைகூறுவதும் இவை போன்ற வீண் வேலைகளைத் தவிர்த்து வறுமை நீங்கவும் கல்வி அறிவு ஓங்கவும் நோய் பின்வாங்கவும் வேண்டிய பொருள் வழங்கி உதவுவார்களாக.

## வாழ்க்கை வானில்

வளர்மதி

### பெண்ணுகி ஆணுகி!

பெண்ணாகப் பிறந்து பெண்ணாய் வளர்ந்து பெண்ணாய் மணம முடித்தவன் ஆணாய்விட்டானாம். மந்திரமா தந்திரமா? மாயமா மாசாலமா — இல்லை உண்மை.

அரசியலிலும் இதுபோன்ற அதிசய மாற்றங்கள் உண்டு. திரு பண்டாரநாயக சில காலத்துக்குமுன் வலதுசாரி வீரன். இப்பொழுது இடதுசாரி வீரனாய் விட்டார்.

பெண் ஆணாதலும், வலம் இடமாதலும உலகியல் நாடக ஒழுங்காய் விட்டன.

### சோதிடர்களுக்குத் தடையுத்தரவு!

பிரதமர் நேரு விஞ்ஞான சாஸ்திர விருப்ப முடையவர். ஆனல் வீண்வதந்திகளை வெளியிடும் குறிசொல்வோரின் கொடுமை தாங்காது சட்ட மூலமாகப் பரபரப்பு விளைவிக்கும் சோதிடர்களைத் தண்டிக்க விரும்புகிறார்.

ஜர்மனிய சர்வாதிகாரி சோதிட நம்பிக்கையினாலேயே கொடிய கொடிய முடிவை அடைந்தார் என்று சொல்லப்படுகிறது.

உரோமவீரன் சீசர் சோதிடரின் எச்சரிக்கையைக் கவனியாது சென்று உயிரிழந்தான் என்பது சரித்திர உண்மை.

சோதிடத்திலும் சுத்த மாய்த் தடை விலங்காத கூற்றுகளுமுண்டு.

'மாடு சாயுது கன்று போகுது மண்ணெடுத்தகுழி பள்ளமாகுது'

என்று குடுகுடுப்பைக்காரன் இராகத்தோடு விரைவாகச் சொல்ல வழிப்போக்கன் ஏதோ உசரிதான என்று எண்ணுவான — மண்ணெடுத்த குழி பள்ளமாகா தென்று சொனனல் ... ... ...

வெங்கலக் குகை யி லிட்டு வியாழன ஓர் பாழும் ஊதமற்றைநாள வெளியாமே. என்றால் அதில் ஆர் பழிசொல்வார்.

இலங்கைச் சோதிடர்கள் பரபரப்பையுண்டாக்குவதில்லை என்றே சொல்லலாம்.

## சைவப் பிணியாளர் சங்க வேண்டுகோள்

ஹெந்தலை வைத்தியசாலையிலிருக்கும் நோய்ப்பட்ட அடியார்களாகிய நாங்கள் சித்த சுத்தியுடனும் மன ஒடுக்கத்துடனும் வணங்கிக் கருணைக்கடலாம் எம்பிரான் திருவருளைப்பெற்று பிணியைத் தடுத்துய்ய எமக்கோர் ஆலயமில்லாக் குறையை யிட்டு நாங்கள் ஓர் சிறு முருகன் ஆலயத்தை நிறுவ உத்தேசித் திருப்பதால் அன்பர்கள் தங்களாலியன்ற பணஉதவி செய்து இத்திருப்பணியை நிறைவேற்றுமாறு வேண்டுகிறோம். தங்கள் உதவியை ஆஸ்பத்திரி வைத்தியதலைவருக்கு (Medical Superintendent) அனுப்புமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றோம என்று திரு. R. முத்தையா (தலைவர்) திரு. V, கோபாலபிள்ளை (காரியதரிசி) ஆகியோர் வைத்தியசாலையிலிருக்கும் சைவப் பிணியாளர் சார்பாக ஓர் வேண்டுகோளை விடுக்கின்றனர்.

[இது சைவமக்கள் கனிவிரும்பி உதவவேண்டிய ஓர் சிறந்த சிவபுண்ணியம். ப—ர்]

## ஆபிரிக்க மூதாதையர் தென் இந்தியரே

### ஆராய்ச்சிக்காதாரம் இரத்த வேறுபாடு

இன்றைய ஆபிரிக்க மக்களுட் பலருடைய மூதாதையர் தென் இந்தியரே என்று தக்க சான்றுடன் கருதப்படுகின்றது. இங்கே சான்ருயமைவது வழக்கமான பழைய பொருள் முதலிய பழையவற்றின் ஆராய்ச்சியாற் பெறப்பட்ட தொன்றன்று. இது இருபிரித்தானிய விஞ்ஞானிகளாற் நூதக்கண்ணுடிவி அதிவைக் கொண்டு இரத்தச் சோதனை செய்து கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது.

சஹாரு வனந்தரத்துக்குத் தெற்கே வசிக்கும் ஆபிரிக்க மக்களுடைய இரத்தமும் இருளர் என்னும் இந்திய மக்களுடைய இரத்தமும் ஒத்த தன்மையவாகும் உறுப்புக்களுள்ளன வென்பது மேலே குறித்த சாதனத்தாற் சோதித்துப் பெறப்பட்டது. பண்டை இந்தியரைப்பற்றிய உண்மைகள் பல இதனுல் நிச்சயிக்கத் தகும். இரத்த வேறுபாடுகளுண்மையும் இதிலே காணலாம்.

# தன்னலங் கருதாப் பொதுசனத் தொண்டு

## திரு. இ. சிவகுருநாதர் M. B. E க்குப் பாராட்டு

### 'கொடை வள்ளற்' பட்டத்தை மகாசனம் வழங்கியது

முதலாளியா தொழிலாளியா என்று இரு சிறுவர்கள் ஒருவரையொருவர் வினவினர். முதலாளியுமல்லத் தொழிலாளியுமல்ல என்றான் ஒருவன். பின் என்ன என்றபொழுது 'செலவாளி' என்றகதையை ஞாபகப்படுத்தி வழக்கறிஞர் திரு. ஏ. அருளம்பலம் யாழ்ப்பாண மக்களாற் பாராட்டப்படும் திரு. இ. சிவகுருநாதர் அவர்களுக்குக் 'கொடையாளி' என்ற கருத்தமையச் செல்வாளி' என்ற பட்டத்தை கொடுக்கின்றேன் என்று சென்ற ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடந்த உபசாரணைக்கூட்டத்திற் கூறினர்.

மந்திரியார் கௌரவ G. G. பொன்னம்பலம் அவர்கள் தலைமை வகித்தார். திரு. சிவகுருநாதரின் காந்திய முறையான தேசசேவையையும் சமயாபிமானத்தையும் பாராட்டிப்பேசி அன்னருக்குப் பட்டம் வழங்கப்படவேண்டியது பல்லாண்டுகளுக்கு முன்னரே என்றும் எக்காலத்திலாவது அவர் பட்டத்தை நாடவில்லை யென்றும் சொன்னர்.

### பட்டந் தேடி வந்த பெருமை

முதலியார் C. முத்துத்தம்பி அவர்கள் திரு. சிவகுருநாதரைப் பட்டம் தேடி வந்ததென்றும் ஆகவே பட்டத்துக்கே ஒரு மகிமை வந்துவிட்டதென்றும் கூறினர்.

பட்டதாரிகளுக்கு ஒரு மகிமையை ஏற்படுத்திவிட்டார் திரு. சிவகுருநாதர் பட்டம் பெற்றமையால் என்று யாழ்ப்பாண நகரசபைத் தலைவர் திரு. சாம் A. சபாபதி அவர்கள் சொன்னர்.

காதி M. M. சுல்தான் திரு. சிவகுருநாதரின் அரிய சேவையைப் பாராட்டித் தமது இஸ்லாமிய சமயத்துக்குச் சாதி மத பேதமின்றிச் செய்த தொண்டுக் கீடுசெலுத்த முடியாதென்றும் தமிழருக்கு மாத்திரமன்று இஸ்லாமியருக்கு" இப்பெரியார் ஓர் வழிகாட்டி என உரைத்தார்.

திருமதி சோமசுந்தரம் உபசாரத்துக்குரிய பெரியாரின் பெருங் குணங்களைப் பாராட்டிப் பேசினர்.

### வாழ்க்கைத்துணை நலம்

திரு. சிவகுருநாதர் அவர்களும் தலைவர் திரு. G. G. பொன்னம்பலம் அவர்களும திரு. K. கனகரத்தினம், திரு T. இராமலிங்கம் அவர்களும் ஊர்வலமாக அழைக்கப் பட்டனர். வழிவழியாக எங்கும் பூமாலை சூட்டப் பெற்றனர். திருமதி சிவகுருநாதர் சிறந்த வாழ்க்கைத் துணைவியாக விருந்து பெருந் தொண்டாற்றிச் சைவ மகளிர் கலலூரியை நிறுவிய பெருமையைப் பெண் உலகம் மறக்கமாட்டாதென எல்லாப் பேச்சாளர்களும் அந்த அம்மையாரை வித்து குறிப்பிட்டனர்.

## செய்தித் திரட்டு

=0=

திரு. மனிலால் காந்தி அவர்களின் தேகநிலையைப் பற்றி அச்சங்கொண்ட அன்பர்கள் வைத்தியரை வரவழைத்தனர். நிலைமை குற்றமில்லை யென்றறிய வருகிறது.

x x x

கொபென்ஹேஜின் பாராளுமன்ற நிலையத்தில் இரவில் இரும்ல் மணியோசை முதலிய நிகழ்ச்சிகள் உண்டானபோது எங்குந்தேடி ஒருவரையுங் கண்டிலர். இதனுற் காவலாளர் படை இருமடங்காக அதிகரிக்கப்பட்டிருக்கின்றது.

x x x

ஊவா மாகாணத்தில் கொசப்பொல என்னும் இடத்திலுள்ள ஒருவரை விவாகஞ்செய்திருந்த ஒரு பெண் இப்போது ஆணுக மாறியதுமல்லாமல் பதினைந்து வயதுள்ள ஒரு பெண்ணை விவாகஞ் செய்திருப்பதாகவுந் தெரிய வருகிறது.

### தனிமொழிச் சர்வ கலாசாலைகள் பற்றிய சந்தேகம்

தமிழ்ச் சிங்களச் சர்வகலாசாலைகளை புறம்பாயிருக்க வேண்டுமென்று சேர் ஐவர் ஜெனிங்ஸ் கூறிய ஆலோசனையைப் பற்றிப் பேசும் பொழுது அது விவேகமுள்ள அரசாங்க உறுப்பினரே கட்சி வாதிகளால் அவ்வகை முறை கலை எடுத்தாளுமாறு நெருக்கப்படுகின்றனர் என்று ஐயுறுதற்கிடமுண்டு என்கிறார் கண்டிக் கலாசாலைத் தலைமை ஆசிரியர் திரு N. S. வால்ரர் அவர்கள் சேர் ஐவருடைய சித்தத்திற் பல திருவிழாக்கள் நடக்கத் தொடங்கி யிருக்கின்றன என்று பலர் நினைக்க வேண்டியே யிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வண்ணார்பண்ணை கிழக்கு நாக லிங்கம் கந்தையா.

— வழக்காளி

இல. 7394

எதிராக

வண்ணார்பண்ணை மேற்கு இஸ்லாம் வீதி. லெப்பை ஒழுங்கை.

1 சின்னன் முகமெட் அப்துல் காதர்

2 பெண் முகமெட் உம்மா

— எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 7394-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை, 1952-ம் ஆண்டு ஏப்பிறில் (சித்திரை) மாதம் 8-ந் திகதி (8-4-52) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:—முதல்வட்டி நபாய் 940-ம் இதில் நபாய் 750 க்கு 16-12-50 திகதி தொடக்கம் 26-4-51 திகதி வரைக்கும் 100க்கு 15 வீத வட்டியும் பின்திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100 க்கு 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு நபாய் 201-85 சதம். இதில் நபா 50 இறுபட்டது.

காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற் பற்று வண்ணார்பண்ணை மேற்கிறை 'ஆயிலடி' நிலப்பரப்பு ஒன்று (1 ம்) குளி 3½ ம் கல்வீடும் கிணறும் செய்பயிர்களும் எல்லை கிழக்கு கதிறு லெப்பை நெயினு முகமெட்டின் ஆதனம். வடக்கு றேட்டு மேற்கு சின்னன் கைம் பெண் பதுமா நாச்சியாவின் ஆதனம் தெற்கு ஒழுங்கை. இதடங்கலும், முற்பதிவு D 208/100.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed Auctioneer.

நெல்லிப்பழை,
15-2-1952.
M. 243 18—3—52.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்

இல. 1261. T

வேலணை மேற்கு கார்த்திகேசு தம்பிராசா காலஞ் சென்றவர் காரர்த்தனை ராசலிங்கம் குணரத்தினம் தத்துவகாரன்.

எதிர்

வேலணை மேற்கு தம்பிராசா ஞானரத்தினம் பிள்ளையும் இன்னும் ஏழுபேரும். —உத்தாரவாதிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 1261. Tம் இலக்கத் தத்துவ வழக்கில் எனக்குக் கிடைத்தகோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் நாலு துண்டுக்காணிகளையும் 1952 ஆம் சித்திரை மீ 8 உ செவ்வாய்க்கிழமை முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணி விபரம்

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸதிறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறைக் கோவிற்பற்று சரவணை இறை 'காம்பக்கொன்றை' கி. பர. 26⅝ டி. கி. பர 13¼, இவைகளுக்குக் கூடிய செ. பர. 59⅜. இதில் செ. பர. 26½ நீக்கி மீதி செ. பர. 32⅞. முப்பத்திரண்டே முக்காலே யரைக்கால் எல்லை கிழக்கு சுப்பிரமணியம் வயித்திலிங்கத்தினுதனம். வடக்கு செல்லத்துரை பெண் மனோன்மணிக்கும் பங்காளருக்கும் நடராசா பெண் சிவபாக்கியத்துக்கும் தம்பிப்பிள்ளை அருளம்பலத்துக்குமுரிய வாதனங்கள் மேற்கு தம்பிப்பிள்ளை அருளம்பலத்தினுதனம். தெற்கு நாகராசா பெண் பார்வதியின் உரிமைக்காரருக்கும் தம்பிராசா ஞானரத்தத்துக்குமுரிய வாதனங்கள். இதடங்கலும்.

(2) டி இறை 'எருக்கலங்கூடல்' செ. பர. 13. பதின்மூன்று எல்லைகிழக்கு முத்துத்தம்பி கைம்பெண் அன்னப்பாவுக்கும் சுப்பர் அம்பலவாணிக்கும் நாகமுத்து சின்னத்தம்பிக்குமுரியவாதனங்கள். வடக்கு தம்பிப்பிள்ளை அருளம்பலத்துக்கும் நாகமுத்து சின்னத்தம்பிக்குமுரியவாதனங்கள். மேற்கு நாகமுத்து சின்னத்தம்பிக்கும் தாமோதரம்பிள்ளை சிவஞானத்துக்கும் பங்காளருக்குமுரிய வாதனங்கள். தெற்கு கார்த்திகேசு சின்னையாவினுதனம். இதடங்கவிற் சொரியலாய் ⅕ ஐந்திலாறு பங்கு.

(3) டியிறை 'தெக்கன்குளம் தெற்கிலிகம். செ. பர. 9½ ஒன்பதரை. எல்லை கிழக்கு தம்பிப்பிள்ளை அருளம்பலத்தினுதனம். வடக்கு குளம் மேற்கு கார்த்திகேசு சின்னையாவினுதனம். தெற்கு சபாரத்தினம் பெண் இராசம்மாவுக்கும் செல்லப்பா பெண் தையல் மூத்தவுக்குமுரியவாதனங்கள். இதடங்கலிற் சொரியலாய் ⅕ ஐந்தில் காலுபங்கு.

(4) டி இறை 'வழுக்கற்கலடு' செ. பர. 6¼ ஆறேகால எல்லை கிழக்கு சுப்பிரமணியர் வயித்திலிங்கத்துக்கும்சேதுபதிபொன்னையாவின் உரிமைக்காரருக்கும் நாகேசர் பெண் தங்கம்மாவுக்குமுரிய வாதனங்கள் வடக்கு தம்பிப்பிள்ளை அருளம்பலத்தினுதனம். மேற்கு சரவணமுத்து கைம் பெண் சின்னம்மாவுக்கும் பங்காளருக்குமுரிய வாதனம். தெற்கு வேலுப்பிள்ளை கைம்பெண் பர்வதத்தினுதனம். இதடங்கலிற் சொரியலாய் ⅕ ஐந்தில் காலுபங்கு.

1952ம் ஆ பங்குனிமீ 5ம் உ
வை. ஏரம்பமூர்த்தி
[illegible]
M. 250 18—3—52

## நன்றி கூறல்

### இந்துமகளிர் கல்லூரிக் கட்டிட நிதி

வண் கிழக்கு யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரிக் கட்டிடங்களுக்கு நிதி திரட்டுவதற்காக இதன் கீழ்க் கையொப்பமிடும் நாங்கள் யாழ்ப்பாணத்திலுள்ள பெருமக்கள் பரோபகாரிகளின் இல்லங்களுக்குப் பலமாதங்களாகச் சென்று அவர்களின் ஆசியையும் நன்கொடையையும் பெற்றுக் கல்லூரிக் கட்டிடங்களிற் சில பகுதிகளைக் கட்டி முடிப்பித்திருக்கிறோம். அப்படிப் பெற்றுக்கொண்ட பணங்களுக்கு அவ்வப்போது பற்றுச்சீட்டுகள்கொடுத்து இருக்கிறோம். அப்படிக் கொடுத்த பற்றுச்சீட்டுகளில் நாங்கள் ஏதாவது தவறு விட்டிருப்பின் அல்லது நாங்கள் அனுப்பியுள்ள பற்றுச்சீட்டுகள் எவ்வித பியாயங்கள்பற்றிக் கிடையாதிருப்பின் அப்படிப் பற்றுச்சீட்டுப் பெறாத அன்பர்களை எங்களுக்கு அறிவித்துக்கொள்ளும்படி அன்பாகக் கேட்டுக்கொள்ளுகிறோம். நாங்கள் பெற்றுக்கொண்ட பணத்தின் விபரத்தையும் அதைக் கட்டிடத்தில் செலவழித்த கணக்கையும் முடித்துப் பரிசோதகரிடம் சமர்ப்பிக்கவேண்டியிருப்பதால் நாங்கள் இந்த விண்ணப்பத்தைச் செய்கிறோம்.

மேற்படி கல்லூரியின் பேரால் வந்த எங்களை மரியாதை செய்து மனப்பூர்வமாகப் பொருள் உதவிநடத்திய எல்லா அன்பர்களுக்கும் அபிமானிகளுக்கும் ஒருமித்தும் தனித்தும் எங்கள் மனமார்ந்த நன்றியை அறிவித்துக்கொள்ளுகிறோம். யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள சைவப்பெண்பாலார்க்கு என்றும் பணி செய்வதற்காக ஸ்தாபிக்கப்பெற்ற இந்துமகளிர்கல்லூரி, திருவருளால் மேலோங்கித் தழைத்து வாழ்க.

C. SANJIVI RAO
Secretary.

விசாலாட்சியம்மாள் சிவகுருநாதர்
Treasurer.

MRS. MASILAMANY,
Asst. Secretary.

Address
C/o Mrs. Sivagurunather,
28 Brown Street
Vannarponnai Jaffna
M. 245 14,18-3-52.

## பன்முறை பல் துலக்குதல் வேண்டும்

### இன்றேல் நோய் குடி கொள்ளும்

எங்கள் பற்கள் எங்கள் தேகமாகிய வீட்டின் வாயில் காவலாராயமைந்திருக்கின்றன. இக் காவலர் தகுதிவாய்ந்தவராயிருப்பின் வீட்டின் ஒவ்வொருபகுதியிலும் காவலரமைய வேண்டிய தேவை ஏற்படாது. பற்கள் நல்லனவாயிருப்பின் தேகசுகம் நல்நிலையிலிருக்குமென்று நம்பியிருக்கலாம்.

தேகத்திலுள்ள அழுக்குநிலையங்களைக் கண்டுபிடித்து அவற்றைச் சுத்திசெய்து தேகசுகத்தைவளர்க்க முயலும இக்காலத்தில் உடலின் விசேஷ உறுப்பாகிய பற்களின் வைத்திய ஆராய்ச்சி இன்றியமையாமையைக் கவனியாமல் விடமுடியாது.

பொருத்துப் பொருமல், உள்ளுறுப்புவளர்ச்சி, உண்ணுக்கு முதலிய நோய்களுக்கு வைத்தியம் செய்வதற்குமுன்னர், பல்லழுக்கு நிலையங்களைப் பார்த்துச் சுத்திசெய்வதே வைத்தியர்கையாளும்முறை பல் நோய், காப்புற்று முதலிய எல்லாவற்றுக்கும் பற்களின் நிலைமையே காரணமாயிருக்கின்றது என்று பிரபல தந்த வைத்தியர் திரு. பங்கிம் முகேர்ஜி கூறுகிறார்.

அளவு கடவாது தாம்பூலம் அருந்துதல் இத் தொடர்பில் நன்மைபயக்கும். அது என்னத் தக்க தொன்றன்று. என்று மேலுங் குறிப்புகின்றார்.

சாப்பாட்டுக்கு முன்னும் பின்னும் பற்கள் எப்பொழுதும் நன்கு சுத்திசெய்யவேண்டிய இன்றியமையாமையை மேலே கண்டவற்றால் வாசகர்கள் கவனிப்பார்களாக.

## உயரிய பதிப்பு!    குறைந்த விலை!!

- இதுவரை வெளிவராத முறையில் தயாரிக்கப்பட்டது.
- எல்லோருக்கும் தெளிவாக விளங்கும் பொருட்டு, மணி நிமிஷம் சேர்க்கப்பட்டது.

நந்தன வருஷ 'கலைமகள்'

# வாக்கிய பஞ்சாங்கம்

[ சுத்த வாக்கிய கணிதம் 1952 – 53. ]

இது ஸ்ரீசைவானுஷ்டானசந்திரப்கேரப, திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண பராமாச்சாரிய சுவாமி அவர்களின் அங்கீகாரம்பெற்று, இட்டமொழி திரு. சிவசூரிய நாராயணபிள்ளை அவர்களால் கணிக்கப்பட்டது.

அழகிய மூவர்ணப் படத்துடன் 104 பக்கங்கள்

1க்கு ரூ 1/= டசனுக்கு ரூ 10/20 தபால் செலவு வேறு தனிப்பிரதிக்கு ரூ 1/10 க்கு ஸ்டாம்பு அனுப்புக.

பதிப்பாளர் :

**கலைமகள் கம்பெனி,**
124, செட்டியார் தெரு, கொழும்பு 11.

யாழ்ப்பாணத்தில் கிடைக்குமிடம் :

T. தம்பித்துரை, 226, ஆஸ்பத்திரிறேட், யாழ்ப்பாணம்.

M. 249 18—3—52

## நேயர்கள் நெஞ்சம்

ஆசிரிய அன்ப!

## "சூரியகுல வேளாளர்"

சாதி மரபு உயர்வு தாழ்வு இக்கால உலகியலிற் காண்பதரிது. சமரசம் சமத்துவம் சுதந்திரம்தான் கவனிக்கப்படுவது.

குலம் கோத்திரம் வர்ணம் வம்சம் என்ற பதங்களுக்கு வெவ்வேறு கருத்துகளிருந்தும் ஒன்றுக்குப் பதிலாக மற்றதை உபயோகிக்கும் வழக்கமுண்டு. இதை "ஆரிய வம்சமோ அசம் டியார் கோத்திரமோ சூரிய வம்சத்தில் தொட்டான வந்திரோ" என்ற ஒப்பாரியிற் காணலாம். பிறப்போடு கூடிய இவ் வித்தியாசங்கள் ஆரிய சமூகத்திற்கு முக்கியமாகவுண்டு ஆனால் தமிழ் மரபில், ஐவகை நிலங்களில் வசித்தவர்களை முறையே வேடர் ஆயர் உழவர் பரவர் மறவர் என்பர். அவர்கள் குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை நில மக்களென அழைக்கப்படுவார்கள். பூமி, நிலம் உள்ளவர்கள வேளாளரெனப்பட்டு அவர்களுக்கு உதவிக்கு வேண்டிய பதினெண்குடி மக்களையும் அவர்களுடன் காண்கிறோம். குடி மக்கள் தமக்கேற்ற தொழில்கள் ஒவ்வொன்றைச் செய்தார்கள். யுத்தத்திலகப்பட்டவர்களும் விலைக்கு வாங்கப்பட்டவர்களும் அனுதைப் பிள்ளைகளும் அடிமைகளாக உபயோகிக்கப்பட்டார்கள். பற்பல சாதியாரும் தம்மை மேலாக நினைப்பது வழக்கம். இதனால் தமிழ்ச் சாதிகள் தம்மை ஆரியப்பேர்களால் அழைப்பதுண்டு. உதாரணமாக பிராமணர், சத்திரியர் வைசியர் எனவும், கங்காகுலம் ,குருகுலம், பிரமகுலம், அயன்குலம் என்றும்; ஸைமன் காசி செட்டி என்பவர் ஈழநாட்டின் சாதி வரிசைகளைப்பற்றி 1850 - ம் ஆண்டெழுதியதிற்கும், இப்போ இருக்கும நிலைக்கும் மிகுந்த வித்தியாசமுண்டு. பொதுவாக எந்தச்சாதி அரசாளுகிறதோ அதே மேலான சாதியாகக் கருதப்படும். இடம்பொருள் ஏவலுண்டானால் மேல்சாதியாய் யாரும வரலாம இதிலிருந்து முதல் இடைகடை மக்களையும் அறியலாம. சிலர் பிறப்பையும் மற்றவர்கள் படிப்பு உத்தியோகம் பொருளையும் கொண்டு மதிப்பார்கள். ஆனால் ஒழுக்கமே உயர்குலம் என்பது தான், யாவராலும் ஒப்புக்கொண்ட முறை "முன்னே கள்ளர் மறவர் கனத்தோர் அகம்படியர் மெல்ல மெல்ல வேளாளராயினர்" என்பதிலிருந்து இதை உணரலாம். யாழ்ப்பாணத்தை முறையே சிங்களவர், கள்ளர், மறவர், பறங்கியர், ஒல்லாந்தர் ஆங்கிலேயர் ஆண்டிருக்கிறார்கள். சிங்களவர் காலத்தில் "கொயிகம்"என்னும் சிங்களவரும், கள்ளர் காலத்தில தொண்டிமான்களும், மறவர் காலத்தில் தேவர்களும் மழுவரும் மேல் மக்களாகக் கருதப்பட்டார்கள். யாழ்ப்பாணத்தைப் பறங்கியர் பிடிக்க முன் ஆண்ட ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் இராசமடப்பள்ளி குமார மடப்பள்ளிகளை மேல மக்களாக கருதப்பட்டது. வன்னியையாண்ட வன்னிய குமாரர்களும எம் நாட்டில் மேல் மக்களாகக் கருதப்பட்டார்கள். சாதிகள் கலந்துபோயும் வேளாளன் என்பதற்கு ஒருவரும் பின்னிற்கமாட்டார்கள். ஏன் என்றால் உணவுப்பொருள்களை வேளாளர் உண்டுபண்ணுவதனாலோ ? பாலும் இதற்குச் சூரியன மிகவும் அவசியமாக வேண்டியபடியால் தம்மை வேளாளர் சூரியனுடைய பிள்ளைகளென எண்ணுகிறார்கள். வேளாண்மை வெட்டியவுடன் சூரியனுக்குப் பொங்கல், பூசைகளும் செய்கிறார்கள். இதை அனுட்டிக்கும் வேளாளர் தம்மைச சூரிய குலத்தவர் என்பது மிகையாகாது. தமிழ் நாட்டில் சோளியதேச அரசர் தம்மைச் சூரிய வம்சத்தவரென்று கருதியதாக அறிகிறோம வேளாளரே அரசனுக்கு முடிசூட்டுவது, தமிழ்மரபு இதனாற்றான் தம்மைச் சூரிய குலமென்பார்கள் போலும். (இராமன்)

[நாம் கூறியவாறு குறித்த குலவைப்பேச்சு ஆராய்ச்சி ஈண்டு இன்றேயெனினும் எமது 90-ம் இதழில், ஓர் அலம விரும்பி "ஓர் ஐயம்" என்று விடுத்த ஐய வினவைக் கண்ட வாசகர் ராமன், எழுதியதை ஈண்டுத் தருகின்றோம். "ஒழுக்கமுடைமை குடிமை" என்ற பொய்யா மொழிப்படி ஒழுக்கமே உயர்குலம் என்னும அவரது கூற்றுக் குறிப்பிடத்தக்கது. ப—ர்.]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

திருத்தொண்டர் திருநாள்

# சிவனடியார் இடுக்கண் களைந்த சிவ பத்தர்

## புகழ்ச் சோழ நாயனார் - - போற்றிய எறிபத்தர்

கொங்க தேசத்திலே கருவூரிலே ஆனிலை என்னும் ஆலயத்திலெழுந்தருளி யிருக்கின்ற சிவபெருமானை வழிபடுகின்றவரும் சிவனடியார் தொண்டு மேற்கொண்டவரும் அவர்களிடுற்ற காலத்தில் இடருக்குக் காரணரா யிருந்தவர்களை மழுவால் வெட்டும் வழக்கமுடையருமாகிய எறிபத்தநாயனார் காலத்திலே சிவகாமியாண்டார் என்னும் பெரியார் ஆனிலைப் பெருமானுக்கு மலர்கொய்யும் வழக்கமுடையரா யிருந்து ஒரு நாள் அதி காலையில் வழக்கம்போல் மலர்கொய்து வருகையில் அக்கர் அரசராகிய புகழ்ச் சோழ நாயனாருடைய பட்டவர்த்தன யானை அவருடைய கையி லிருந்த திருப்பூங் கூடையைப் பறித்துச் சிதறிற்று. பாகர்கள் யானையை விரைவாய்ச் செலுத்திச் சென்றனர். சிவகாமியாண்டார் பதைபதைத்து யானைக்கடிக்க முயலுதலும் விரைந்து செல்லச் சக்தியில்லாதவராகி நிலத்தில் விழுந்து சிவதா சிவதா என்று அலறினர். அதைச் செவிமடுத்த எறிபத்த நாயனார் சிவகாமியாண்டாரிடம் விரைந்து சென்று என்ன நடந்ததென்பதைக் கேட்டறிந்து ஓடிச்சென்று யானையையும் யானைப்பாகரையும் மழுவால் வெட்டிக் கொன்றனர்.

### சிவ நிந்தை பொறுக்கலாற்றார்!

இவ்வாறு இறந்தவரையொழித்த ஏனையோர் அரசனை யடைந்து யானையும் யானைப்பாகருங் கொல்லப்பட்ட செய்தி கூறுதலும், அரசன் கோபங்கொண்டு, குதிரைமீதேறிச் சேனைகளுடனே யானையும் பாகருமிறந்த இடத்தற்கு வந்து சிவவேடதாரகிய எறிபத்த நாயனார் மாத்திரம் நிற்பதைக் கண்டு யானையைக் கொன்றவர் யாரென வினவினர். மழுவைத்தாங்கி நின்ற அவரே கொன்றாரெனக் கூறினர் யானைப்பாகர். அவர் சிவபத்தராகையினால் யானை குற்றஞ்செய்யாது கொல்லார் என நினைந்து படைகளை நிறுத்திக் குதிரையினின்றிறங்கி எறிபத்த நாயனாரை யடைந்து வணங்கி, யானையின் குற்றத்திற்கு யானையைப் பாகரோடு கொன்றதுமாத்திரம் போதுமாவென்று வினவ, சிவகாமியாண்டார் கையிலிருந்த பூக்கூடையை யானை பறித்துச் சிதறியதையும், பாகர்கள் அதைத் தடாது வாளா சென்றதையும் தாம் கொன்றதையும் விளக்கிக் கூறினர். புகழ்ச் சோழ நாயனார் அச்சங்கொண்டு எறிபத்த நாயனாரை வணங்கி அத்தக் குற்றத்திற்கு யானையையும் பாகர்களையும் கொன்றது போதாதென்று தன்னையுங் கொல்லுமாறு வேண்டி, அவர் தாங்கியிருந்த மங்கல மழுவாற் கொல்லுதல் முறையன்றெனவுன்னித் தனது உடைவாளை உருவிக் கொடுத்தார்.

அங்கண ரடியார் தம்மைச்
  செய்தவிவ் வபரா தத்துக்
கிங்கிது தன்னாற் போதா
  தென்னையுங் கொல்ல வேண்டு
மங்கல மழுவாற் கொல்கை
  வழக்குமன் றிதுவா மென்று
செங்கையா லுடைவாள் வாங்கிக்
  கொடுத்தனர் தீர்வு சேர்வார்.

### தொண்டின் சிறப்பு

இவ்வாறு கொடுத்தலும், தன்னுடைய யானை, யானைப்பாகர்கள் இறந்ததை நினைந்துத் துன்புறுது தன்னையுங் கொல்லும்படி வேண்டிநிற்கும் அரசனது அன்பின்பெருக்கைக் கண்டு அச்சமுற்றுத் தாமே உயிர் துறத்தல் தகுதியென்று நினைந்து அந்த உடைவாளை வாங்கித் தன் கழுத்தை யரியத் தொடங்கினார் எறிபத்த நாயனார். புகழ்ச்சோழ நாயனார் கடுகடுக்கி விரைந்துசென்று வாளையுங் கையையும் பிடித்தார். தமது எண்ணம் நிறைவேறுதலை நினைந்து எறிபத்தநாயனார் வருந்தினார். இவர்களுடைய துன்பத்தை நீக்கும்பொருட்டு அடியார்தொண்டின் சிறப்பை உலகுக்கு அறிவிக்குமாறு பரமசிவனது திருவருளாற் பூக்கள் நிறைப்பெற்றனவென்று சிவபிரானது திருவருளினாலே ஓர் அசரீரி யுண்டாயிற்று. உடனே யானை எழுந்தது, பாகருமெழுந்தனர்.

தொழுந்தகை யன்பின் மிக்கார்
  தொண்டினை மண்மேற் காட்டச்
செழுந்திரு மலரை யின்று
  சினக்கரி சிந்தத் தீங்கட்
கொழுந்தணி வேணிக் கூத்த
  ருளினாற் கூடிற் றென்றங்
கெழுந்தது பாக ரோடு
  யானையு மெழுந்த தன்றே.

ஆண்மாட்டமைந்த அன்பே உருவாய் வந்த அடியார் திலகங்கள் அன்பு மீதூர ஒருவரை யொருவர் அடிகளில் வீழ்ந்து வணங்கினர். தேவர்கள் பூமாரி பொழிந்தனர்.

ஈரவே பூட்டும் வான்மீட் டெறி
  பத்தர் தாமு மந்த
சேரியர் பெருமான் றன்மேல்
  விழுந்தனர் கிருபர் கோனும்
போர்வடி வாளைப் போக
  வெறிந்தவர் கழல்கள் பற்றிப்
பார்மிசைப் பணிந்தார் விண்ணோர்
  பனிமலர் மாரி யார்த்தார்.

திருப்பூங்கூடையிற் பூக்கள் நிறைந்தன. சிவகாமியாண்டார் சித்தங் களிகூர்ந்தது. எறிபத்தநாயனார் அவ்வாறு விரும்பிவேண்டப்புகழ்ச் சோழ நாயனார் யானைமீதேறித் தமதரண்மனைக்குச் சென்றார். இவ்வாறு திருத்தொண்டு புரிந்துவாழ்ந்து எறிபத்தநாயனார் சிவகணங்களுக்குத் தலைவரானார்.

## பாவலரின் சொற்சித்திரம்

1-ம் பக்கத் தொடர்ச்சி

மணமக்கள் நல்லொழுக்கமுடையவர்களாய், பொய்யின்றி ஈருடலும் ஓருயிரும் போல ஒன்றுபட்ட அன்புடன் வாழவேண்டுமென்பதே அடிகளின் கருத்து. கற்பனைக் களஞ்சியமாகிய இப் புலவர் பெருமான் இப்படியே எந்தச் செய்யுளிலும் ஏதாவது ஒரு கற்பனையை அமைத்தே பாடுவார்.

அச்செய்யுளிது,

ஐயநின் சென்னி மிசை
  யுறைகின்ற மடமங்கை
  யாரென்ன உமை வினவலும்
அன்னதொரு மடமங்கையன்று
  வெண்டிரை கொழித்
  தழகொழுகு தண் புனலெனத்
துய்ய வொளி யானனம்
  கரிய விழி காது வாய்
  தோயத்தி லுண்டோ வெனச்
சொல்லருங் கயல மலர் நாவிமலர்
  கொடிவள்ளை
  தூய செஙகுமுத மென்னப்
பொய்யென நினைத்து
  நறகொங்கையும் கூந்தலும்
  புனலினிடை யுண்டோவெனப்
புர்புதஞ் சைவலம தெனவே
  மறுத்தே
  புகன்றிடுதி கங்காயெனத்
தையலவன் ஏன் என்ன,
  ஈரா்ணோடு வணங்கியென்
  தன்பிழை பொறுத்திடென்றே
சங்கரனுரைத்திடத் திருவுளம்
  மகிழ்ந்த சிவ
  சங்கரியுமைக் காக்கவே,

## சைவத்தைவளர்த்தவீரத்தாய்மார்

1-ம் பக்கத் தொடர்ச்சி

கணவன் தன்னைக் குலதெய்வமாகக் கருதி விலகிய காலத்தும் எவரும் வெறுக்கும் பேய் வடிவத்தை விரும்பிப் பெற்றனர்; இவர்கள் அறவதிலே மிக்க மேம்பாடுற்றிருந்தது, அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை முதலிய நூல்கள் அதற்குச் சான்றாகும். முதல் முதல் பண்ணோடு சேர்த்துப் பாடிய பெருமையும் இறைவனால் "அம்மையே" என்றழைக்கப்பட்ட பெருமையும் இவர்களையே சாரும்.

## ஊக்கந்தரும் உடல் நிலையமைப்பு

—0—

இருக்கின்ற கடக்கின்ற எந்த நேரத்திலும் உறுதியான உடல் நிலையமைத்தல், குத்து, நோ, முதலிய பல துன்பங்களை யொழித்து இன்பத்தையும் ஊக்கத்தையும் தருமென்கிறார் ஓர் ஆங்கில வைத்தியர். இருக்கின்ற கடக்கின்றபொழுது தேகம் முன்னுக்கு அல்லது பக்கங்களுக்கு வளைதல் சரிதல் பல குத்து நோக்களுக்கு ஏதுவாயிருக்குமென்கிறார்.

இருக்கும் நடக்கும் பொழுது, தலை மேலும், நாடி உள்ளுக்கும், புயங்கள் பின்னுக்கு மாகத் தேகம் அமைந்து பழகுதல் யாவருக்கும் வேண்டப்படுவதென்றும் இளைஞருக்கு இன்றியமையாததென்றும் அவர் கூறுகிறார்.


## பிரசித்த ஏல விற்பனவு

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை றேட்டில் 284-ம் நம்பர் கடையில் கா. க. இளையதம்பியிடம் 1950-ம் ஆ. ஐப்பசி மீ 1 உ தொடக்கம் 1951-ம் ஆ. மாசி மீ 28 உ வரை வைத்த அடைவுகளில் மீட்கப்படாதவைகளை 1952-ம் ஆ. பங்குனி மீ 29 உ சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் டிை கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

பொ. இராசரத்தினம்
ஏலவிற்பனவுகாரர்
12 - 3 - 52
M 247 14, 18—3—52.

திறமான தேக்க மரங்கள் பல நீளங்களிலும்
திறமான ஞணிமார்க்ஓடுகள் 13½, 14 இஞ்சிகளிலும்
வந்திருக்கின்றன
தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்
சேகரம் & சன்ஸ்
Std. 2 ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.

# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாதமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

Std. 14 20-11-[illegible] [illegible]

# சாலாமிஸ்ரி லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல், பித்தப்பாண்டு, குன்மவாயு, நெஞ்செரிவு, கை கால வலி, அசதி, அஜீரணம், வயிறப் பொருமல், புளித்த ஏப்பம், மலச்சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, சூலை, சந்துவாயு முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனி போல் நீங்கும். தேசபுஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் அதிகமாய்க் காணுதலால் சேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப் பலம் உண்டாகும்.

ஒருறுத்தல் விலை ரூபாய் 25-00, அரைறுத்தல் விலை ரூபாய் 12-50, கால்றுத்தல் விலை ரூபாய் 6-75
வி. பி. பி. செலவு பிரத்தியேகம்.
வி. பி. பி: மூலமும் மருந்துகள் அனுப்பப்படும்.

சிவஞான பற்பொடி

சிவஞான பற்பொடியினால் காலை பல் விளக்கி வந்தால், வாய் நாற்றம், முரசு கரைதல், முரசால் சீழ்வடிதல், முரசால் இரத்தம் வருதல், பல்லில் அரணை கட்டல், பல்லைப் பூச்சி அரித்தல் முதலிய சகல துர்க்குணங்களையும் அகற்றிப் பல்லுக்குப் பெலத்தையுங் கொடுக்கும்.

பொட்டணம் 1-க்கு விலை சதம் 25

K. ஆறுமுகம்பிள்ளை

எமது விலாசம் நி. 3/1 தட்டாதெரு
M 196 1-2—30-4-52. கோட்டைமுனை, மட்டக்களப்பு.

L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

நல்ல வாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின் மிகப் பெரிய நகை வியாபாரிகள்
=0=
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
விலாசம்:
63, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.


Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. or and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponna, Jaffna on Tuesday. March 18. 1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org